FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319455

1. District : Tiruppur PS: VSAC Year: 2026 FIR No.: 11/2026/AC TIPR Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 28.08.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.08.2026 Date to : 24.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 10.30 hrs Time to : 10.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 07.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 28.08.2026 Time : 07.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol. II நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Tamil Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Aboout 28 km North West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Assistant Engineer Office, Thekkalur East, Tiruppur.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S.P. Prakash (b) Father's/ Husband's Name : S.S. Ponnusamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 36/2026 (d) Nationality Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Business (g) Address : Door No. 160A, 2nd Street, Seguvanthali Karumathampatti, Coimbatore 641662.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) T. Essakkimuthu, Assistant Engineer, TNPDCL, Thekkalur East, Avinashi, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) –

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

Separate sheet attached

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் பதிதகவல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

S.P. Prakash
28/02/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name பெயர் K. Sasikala
Rank நிலை Inspector of Police No. எண்
VWAC, Tiruppur
28.02.2026.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 11/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 28.08.2026- ம் தேதி காலை 06.20 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.S.P.பிரகாஷ், த/பெ.S.S.பொன்னுசாமி, கதவு எண்.160A 2-வது தெரு, செகுடந்தாளி, கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் 641 668 என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் S.P.பிரகாஷ், த/பெ.S.S.பொன்னுசாமி, கதவு எண்.160A, 2-வது தெரு, செகுடந்தாளி, கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் 641 668 பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர் நான் கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி, செகுடந்தாளி 2-வது தெருவில் வசித்து வருகிறேன். நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசி ரோடு அணைபுதூரில் M/S ELK Garments என்ற கார்மெண்ட்ஸ் பெயரில் நிறுவனத்தை மத்திய அரசின் Micro, Small and Medium Entreprises (MSME) UDYAM REGISTRATION NUMBER UDYAM-TN-28-0015104 dt.21.03.2019 பதிவு செய்து நடத்தி வந்தேன். அந்த நிறுவனம் தற்போது செயல்பாட்டில் இல்லை. பின்னர் நான் திருப்பூர் மாவட்டம், ஆலாம்பாளையம், தெக்கலூர் அஞ்சல் ரங்கசாமிகவுண்டர் மகன் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு சொந்தமான கதவு எண்.2/445/3, பூத்தோட்டம், நத்தகாட்டு பிரிவு, தெக்கலூர் என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து 3 வருடமாக ELK Garments என்ற பெயரில் மர கைவினை பொருட்கள் தயார் செய்யும் நிறுவனத்தை நானும் எனது மனைவி பூரணியும் சேர்ந்து நடத்தி வருகிறோம். இந்த நிறுவனத்திற்கான கட்டிடத்திற்கு additional லோடு தேவைப்பட்டதாலும், கமர்சியல் கனெக்சனிலிருந்து MSME மின் இணைப்புக்கு மாற்றுவதற்கு நில உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கேட்ட போது அந்த வேலைகளை என்னையே பார்த்துக் கொள்ளுங்கள் என்று

சொன்னார். அது சம்பந்தமான வரிரசீது மற்றும் ஆவணங்களை தருவதாக சொன்னார். எனது நிறுவனத்தின் மின் இணைப்பை 5KW லிருந்து 10KW லோடு மாற்றம் செய்யவும், கமர்சியல் கனெக்சனிலிருந்து MSME மின் இணைப்பிற்காக மாற்றம் செய்ய வேண்டி இருந்ததால் 2026 வருடம் மார்ச் மாதத்தில் நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசி, தெக்கலூர் கிழக்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் லிமிடெட் AE அலுவலகத்திற்கு சென்று AE திரு. இசக்கிமுத்து என்பவரை பார்த்து கேட்ட போது சர்வீஸ் உங்கள் பெயரில் உள்ளதா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னபோது நிலத்தின் உரிமையாளர் பெயரில் தான் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும் MSME மின் இணைப்பிற்கும் நிலத்தின் உரிமையாளர் பெயரில் MSME பதிவு செய்திருந்தால் தான் மாற்றம் செய்ய முடியும் என்று சொன்னார். நான் இதனை நில உரிமையாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கேட்ட போது அவர் ஏற்கெனவே தான் அந்த இடத்தில் நடத்தி வந்த பவர்லூமுக்காக 2019 வருடம் MSME பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த சான்றிதழ், வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது, பேன் கார்டு மற்றும் ஆதார்கார்டு நகல் ஆகியவற்றை கொடுத்தார். நான் எனது ஆடிட்டரிடம் MSME மின் இணைப்பிற்காக மாற்றம் செய்ய கேட்ட போது அவர் நில உரிமையாளரின் பேன் கார்டு கேட்டார். நான் ஆடிட்டரிடம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேன் கார்டு கொடுத்த போது கிருஷ்ணமூர்த்தி பெயரில் UDYAM REGISTRATION NUMBER UDYAM-TN-28-0205436 dt.27.03.2026 பதிவு செய்யப்பட்டது. நான் 9.4.2026 தேதி நிறுவனத்தின் மின் இணைப்பை 5KW லிருந்து 10KW additional லோடாக மாற்றம் செய்ய கிருஷ்ணமூர்த்தி பெயரில் ஆவணங்களுடன் ஆன்லைனில் விண்ணப்பம் செய்திருந்தேன். அதற்கான கட்டணம் ரூ.16,435-யை கட்டினேன். மேலும், MSME மின் இணைப்பிற்காக மாற்றம் செய்ய கேட்டும் ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். இதுசம்பந்தமாக பலமுறை AE அலுவலகத்திற்கு சென்று AE திரு.இசக்கி முத்து அவர்களை பார்த்தும் போனிலும் பேசியுள்ளேன். பின்னர் நான் வாடகைக்கு இருக்கும் எனது நிறுவனத்தின் கட்டிடத்தின் மின் இணைப்பு 10KW additional லோடாக ஜூலை மாதத்தில் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் நான் கமர்சியல் கனெக்சனிலிருந்து MSME மின் இணைப்பிற்காக மாற்றம் செய்ய AE

அலுவலகத்திற்கு சென்று AE இசக்கிமுத்து அவர்களை பார்த்து கேட்ட போது புதிதாக ஒரு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று கூறி அவர் அவரது உதவியாளர் நேரு என்பவரிடம் ஆவணங்களை கொடுங்கள் என்று சொல்லி நேருவை அழைத்து எனது நிறுவனம் பெயரில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய சொன்னார். அப்போது நான் AE இசக்கிமுத்து அவர்களிடம் கமர்சியல் இணைப்பில் உள்ளதால் சார்ஜ் அதிகமாக வருகிறது. சீக்கிரமாக மாற்றம் செய்து தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பார்க்கிறேன் என்று சொன்னார். அப்போது நான் வரிரசீது, ஆதார்கார்டு, மின்கட்டண ரசீது ஆகியவற்றை உதவியாளர் நேருவிடம் கொடுத்தேன். பின்னர் 14.7.2026 தேதி எனது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. அதில் Received your application with Ref.No.200032800726222 . Please pay the registration charges Rs.220 within 15 days at www.tnebnet.org/awp/login-TANGEDCO. இதுசம்பந்தமாக AE இசக்கிமுத்து அவர்களிடமும், அவரது உதவியாளர் நேருவிடமும் தொடர்ந்து செல்போனில் பேசியுள்ளேன். 17.8.2026 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நான் தெக்கலூர் கிழக்கு AE அலுவலகம் சென்று AE இசக்கிமுத்து அவர்களை பார்த்து MSME மின் இணைப்பு மாற்றம் சம்பந்தமாக கேட்டபோது அவர் தனக்கு வேலை அதிகமாக இருக்கிறது. உங்களுக்கு எஸ்டிமேட் ரெடி பண்ண வேண்டி உள்ளது. சீக்கிரமாக ரெடி பண்ணி விடுகிறேன். எனக்கு தனியாக ரூ.25,000/- கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் பில் அதிகம் வருகிறது சீக்கிரமாக டாரிப் சேஞ்ச் செய்து கொடுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். 21.8.2026 தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் AE இசக்கிமுத்து அவர்கள் எனது நிறுவனத்திற்கு வந்த விபரத்தை எனது நிறுவன மேலாளர் எனக்கு தொடர்பு கொண்டு சொன்னார். அப்போது நான் எனது சித்தப்பா இறந்த காரியத்திற்காக கோயம்புத்தூரில் இருப்பதாக சொன்னபோது அவர் திங்கட்கிழமை அலுவலகத்திற்கு வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி நான் 24.8.2026 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் தெக்கலூர் கிழக்கு அலுவலகம் சென்று AE இசக்கிமுத்து அவர்களை பார்த்து MSME மின் இணைப்பு மாற்றம் செய்ய விண்ணப்பித்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகியும் மாற்றம் ஆகாதது சம்பந்தமாக கேட்ட போது அவர் உங்களுக்கு எஸ்டிமேட் சேங்சன் ஆகியுள்ளது. ADக்கும்

தனக்கும் சேர்த்து தனியாக பணம் ரூ.25,000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம் இபி சார்ஜே அதிகமாக கட்டி வருகிறேன். தொழிலும் அதிக லாபமாக இல்லை கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று சொன்னபோது நீங்களே இப்படி சொல்லலாமா என்று கூறிவிட்டு பணம் 10,000/-த்தை குறைத்துகொண்டு உடனே 15,000/- கொடுங்கள் என்று சொன்னார். நான் வேறு வழியில்லாமல் செலவுக்காக வைத்திருந்த பணம் ரூ.5,000/- த்தை அவரிடம் அப்போதே கொடுத்தேன். அவர் அந்த பணத்தை வாங்கிவிட்டு மீதி பணம் ரூ.10,000/- ரெடிசெய்துவிட்டு வந்து பாருங்கள். உங்களுக்கு உடனடியாக மின் இணைப்பை மாற்றம் செய்து தருகிறேன் என்று கூறினார். பின்னர் நான் வந்துவிட்டேன். 25.8.2026 தேதி எனது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. அதில் Application Ref.No.200032800726222. Service connection estimate sanctioned. Pay Rs.165 within 15 days at www.tnebnet.org/awp/login-TANGEDCO இருந்தது. நான் வைத்திருக்கும் நிறுவனத்திற்கு MSME மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுக்க பணம் ரூ.25,000/- லஞ்சமாக கேட்டு பணம் ரூ.10,000/-த்தை குறைத்துகொண்டு மீதி ரூ.15,000/-த்தில் ரூ.5,000/- த்தை அப்போதே பெற்றுக் கொண்டு மீதி தொகை ரூ.10,000/-த்தை கேட்ட AE திரு.இசக்கிமுத்து அவர்களுக்கு பணம் கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே லஞ்சம் கேட்கும் AE திரு.இசக்கிமுத்து மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx S.P.Prakash 28/08/2026. Sir, Received the complaint on 28.08.2026 at 06.20 hrs and made preliminary verification between 06.20 hrs and 07.00 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.11/2026/AC/TPR u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 28.08.2026 at 07.00 hrs. Sd/-xxxx (K.Sasilekha). 28/08/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.S.P.Prakash, S/o. S.S.Ponnusamy, Door.No. 160-A, 2nd street, Segudanthali,

Karumathampatti, Coimbatore 641668 is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 22.09.2025